சுண்டுக்குளி [illegible] நூலகம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஷூ ஆனி மீ 26 ஆம் உ | செவ்வாய்க்கிழமை | (10 - 07 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஜ் 16 | ஓசை 142

## பறையனாலங்குளத்தில்கண்ணிவெடி 10 இராணுவம் பலி; 22 பேர் காயம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறை, கொண்டாச்சி ஆகிய இடங்களில் இருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டுச்சென்ற ஸ்ரீலங்காப் படையினர் தரைக்கண்ணி வெடியில் சிக்கியதில் பத்துப்பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இவர்களில் இருபத்திரண்டுபேர் காயமடைந்ததாகவும் அவர்கள் சென்ற வாகனம் பலத்த சேதம் அடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

மன்னார் - மதவாச்சி வீதியில் உள்ள பறையனாலங்குளம் முகாமிற்குச் சென்றுகொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றது.

# விமானத்தாக்குதலைக்கண்டு மக்களும்நாமும்அஞ்சவில்லை!

## பி.பி.ஸி. நிருபருக்கு கரிகாலன் பேட்டி 2-வதுஉலகயுத்தம்எனவர்ணனை!

(லண்டன்)

சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த சுமார் ஒருமாத காலமாக நடைபெற்றுவரும் போரில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பலியானதைத் தொடர்ந்து "இரண்டாவது உலகப்போர்'' என்று பி. பி. ஸி. வர்ணித்துள்ள இந்த யுத்தத்தில் விமானத் தாக்குதலைக் கண்டு நாமும் அஞ்சவில்லை, எம் மக்களும் அஞ்சவில்லை, மக்கள் எம் பக்கம் உள்ளனர் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன் மட்டக்களப்பில் பி பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாகவும் அங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் அரசபடைகளை வரவேற்பதாகவும் சிறிலங்கா அரசு மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்துவரும் இவ்வேளையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் கண்டறிந்த லண்டன் பி. பி. ஸி, நிருபர் மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்தித்துப் பேட்டிகண்டார்.

விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த பொலிஸ்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறிவருவதுபற்றி பி.பி.ஸி.நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்; தம்மிடம் சரணடைந்த எந்தப் பொலிஸாரையும் நாங்கள் சுட்டுக் கொல்லவில்லை என்றும் போரில் கொல்லப்பட்ட பொலிஸாரைத் தவிர சரணடைந்த பொலிஸார் தங்களிடம் பாதுகாப்பாக இருப்பதாகக் கரிகாலன் பதிலளித்தார்,

ஸ்ரீலங்கா அரசு விமானத் தாக்குதலை நடாத்துவதற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அனாதரவான நிலையில் படகு

(விசேட நிருபர்)

மன்னார், பேசாலைப் பகுதி இயந்திரப் படகொன்று ஆட்கள் எவரும் இல்லாமல் பூநகரி கல்முனைக் கடலில் கரை ஒதுங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

28 அடி நீளமுள்ள மஞ்சள், நீலநிற பெயின்ற் பூசப்பட்ட மேற்படி படகை குரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழகத்தில் மாத்தயா

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10.00

## போர்க்கால நடவடிக்கையில் பெண்களின் முன்மாதிரி

(அரியாலை)

அரியாலை கிழக்கு, மேற்கு, மத்தி, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அரியாலைப் பிரதேச சிற்றூர் அவைகள்போர்க்காலஏற்பாடுகளை மனதில் கொண்டு தினமும் கூடிமுடிவுகளை மேற்கொண்டு வருகின்றன.

சிற்றூர் அவைகளின் இந்த நடவடிக்கையினால் தற்பாதுகாப்பு பயிற்சிக்கான ஆள் திரட்டல்,இரத்ததானம்செய்வதற்கு ஆட்சேர்ப்பு, போரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் உடைமைகளை கொள்ளையிட்டோர் பிடிபட்டனர்

(வவுனியா)

வவுனியாவில் கடைகளையும், வீடுகளையும் உடைத்து பொதுமக்களின் பொருட்களை திருடிவந்த சிங்களவர் இருவர் பொது மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் நடவடிக்கையை அடுத்தும் துப்பாக்கிப் பிரயோகங்களை அடுத்தும் ஏராளமான குடும்பங்கள் தத்தமது வீடுகளை விட்டு வெளியேறி, அயல் கிராமங்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீலங்கா அரசு

## தமிழரை அழிக்கின்றது; புலிகள்லண்டனில்அறிக்கை

(லண்டன்)

விடுதலைப்புலிகளை அழிப்பதாகக் கூறி ஸ்ரீலங்கா அரசு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைத் தமிழர்களை அழித்தொழிக்க முயல்வதாக விடுதலைப் புலிகள் லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள பல தமிழர்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டும், உயிருடன் கொளுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையல்ல

-வாழப்பாடி

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலையை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு பிரிவு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி

இச் சம்பவங்களை இந்திய மத்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது எனவும் அவர் சொன்னார்.

இலங்கையின் தற்போதைய விவகாரம் அதன் உள்நாட்

### பாரிய இராணுவ நடவடிக்கைகள்

## கிழக்கில் முடிவடைந்ததாக ரஞ்சன் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்காஇராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய தாக்குதல் நடவடிக்கைகள்முடிவடைந்துவிட்டதாக அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ணா நேற்று தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பகுதிகளின் நிலைமைகள் குறித்து அவர் நேற்று வெளிநாட்டு தூதரக பிரதிநிதிகளிடம் எடுத்துச் சொன்னார். எனினும் கிழக்கில் சிறிய அளவில் தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இங்குள்ள காடுகளில் விடுதலைப் புலிகள் பதுங்கியுள்ளனர் என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திக்குத் தெரியாத காட்டில் புலிகள் முகாம்

### கண்டுபிடித்ததாக அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் கஞ்சிக்குடியாறு பகுதியில் உள்ள திக்குத் தெரியாத காட்டில் நானூறு விடுதலைப் புலிகள் இருப்பதை ஸ்ரீலங்கா படையினர் கண்டுபிடித்துள்ளதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு கொங்கிரீட்டினா

தடைகளும், சக்திவாய்ந்த கண்ணிகள், பொறிகள் என்பன காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இக்காட்டுப்பகுதியை படையினர் சுற்றிவளைத்துள்ளதால் புலிகளின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்

# புலிகள் லண்டனில் அறிக்கை

(லண்டன்)

விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறி ஸ்ரீலங்கா அரசு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைத் தமிழர்களை அழித்தொழிக்க முயல்வதாக விடுதலைப் புலிகள் லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள பல தமிழர்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டும், உயிருடன் கொளுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையல்ல

**-வாழப்பாடி**

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலையை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு பிரிவு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

இலங்கையில் நடைபெறும் இச் சம்பவங்களை இந்திய மத்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது எனவும் அவர் சொன்னார்.

இலங்கையின் தற்போதைய விவகாரம் அதன் உள்நாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இறந்தவரின் குடும்பத்துக்கு இரண்டாயிரம் வழங்கப்படும்

(கிளிநொச்சி)

கடந்த ஜூன் 13ஆம் திகதிக்குப் பின்பு இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் மொத்தமாக 13 பேர் கிளிநொச்சியில் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சடங்குச் செலவாக கிளிநொச்சி அரச அதிபரால் இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. தர்மபுரம் விமானக்குண்டு வீச்சின்போது மரணமடைந்த சின்னையா சுந்தரராசாவின் குடும்பத்துக்கு இவ்வாறு கிளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரைக் காப்பாற்ற இந்தியா கப்பல் அனுப்ப வேண்டும்

## -இராமேஸ்வரத்தில் தமிழ் அகதிகள்

(சென்னை)

'சிறிலங்கா அரசபடையினரால் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி இருக்கும் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களை காப்பாற்றும் வகையில் இந்தியஅரசு கப்பலை அனுப்பி அம்மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று இந்தியா சென்றுள்ள தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா படையினர் வடக்கு, கிழக்கில் தாக்குதல்களை தொடர்ந்ததின் பின்பு 10,900 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளதாகவும், கடந்த ஏழு நாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**...னித்துள்ள இந்த யுத்தத்தில் விமானத் தாக்குதலைக் கண்டு நாமும் அஞ்சவில்லை, எம் மக்களும் அஞ்சவில்லை, மக்கள் எம் பக்கம் உள்ளனர் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன் மட்டக்களப்பில் பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.**

கிழக்கு மாகாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாகவும் அங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் அரசபடைகளை வரவேற்பதாகவும் சிறிலங்கா அரசு மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்துவரும் இவ்வேளையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் கண்டறிந்த லண்டன் பி.பி.ஸி, நிருபர் மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்தித்துப் பேட்டிகண்டார்.

விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த பொலிஸ்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறிவருவதுபற்றி பி.பி.ஸி.நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்; தம்மிடம் சரணடைந்த எந்தப் பொலிஸாரையும் நாங்கள் சுட்டுக் கொல்லவில்லை என்றும் போரில் கொல்லப்பட்ட பொலிஸாரைத் தவிர சரணடைந்த பொலிஸார் தங்களிடம் பாதுகாப்பாக இருப்பதாகக் கரிகாலன் பதிலளித்தார்,

ஸ்ரீலங்கா அரசு விமானத் தாக்குதலை நடாத்துவதற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அனாதரவான நிலையில் படகு

(விசேட நிருபர்)

மன்னார், பேசாலைப் பகுதி இயந்திரப் படகொன்று ஆட்கள் எவரும் இல்லாமல் பூநகரி கல்முனைக் கடலில் கரை ஒதுங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

28 அடி நீளமுள்ள மஞ்சள், நீலநிற பெயின்ற் பூசப்பட்ட மேற்படி படகை குரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மீட்பு நிதித் தெருக் கூத்து

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு நடாத்தி வரும் தெருக்கூத்து கலை நிகழ்ச்சி அடுத்த வாரமளவில் வடமராட்சியிலும், தென்மராட்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழகத்தில் மாத்தயா

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10.00 மணிக்குகைலாசபதிகலையரங்கில் நடைபெறவிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பொதுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தயாவும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகியும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# சென்னையில் நால்வர் கைது

(சென்னை)

சென்னையில் ஈ பி. ஆர் எல். எவ். இயக்கத்தினர் கொல்லப்பட்டது தொடர்பாக நான்கு உள்ளூர் வாசிகளைப் பொலிசார் கைது செய்தனர்.

இவர்கள் எந்தவொரு போராளிக்குழுவுடன் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## மூதூரில்

# 40,000 மக்கள் வெளியேற்றம்; இராணுவத்தால் கொள்ளை!

(மூதூர்)

கடந்த நான்கு நாட்களில் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர், கட்டைபறிச்சான் என்னும் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்திற்குமிடையில் கடும் மோதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதேவேளை மூதூரில் பல இடங்களில் விமானங்கள் மூலம் குண்டுவீச்சுத்தாக்குதல்களும், கடலிலிருந்து கடற்படையினர் கரையோரங்களுக்குப் பீரங்கித் தாக்குதல்களும் செய்து வருகின்றனர். இதனால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்புத் தேடி அப் பகுதிகளைவிட்டு வெளியேறிவருகின்றனர்.

இதில் கடந்த நான்கு நாட்களில் மட்டும் மூதூர் உதவி அரசாங்கஅதிபர் பிரிவிலிருந்து நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறிவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதைத்தொடர்ந்து நேற்று மூதூர், கட்டைபறிச்சான் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களின் வீடுகளில் உள்ள பொருட்களைச் சிங்கள ஊர்காவற் படையினரும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருமாகச் சேர்ந்து கொள்ளையடித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விளாங்குடியில் அகதிமுகாம்

(மதுரை)

இங்குள்ள விளாங்குடியில் இருநூறு இலங்கைத் தமிழ் அகதிகள் தங்குவதற்கு முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

லங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய தாக்குதல் நடவடிக்கைகள்முடிவடைந்துவிட்டதாக அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ணா நேற்று தெரிவித்தார்.

...கில் சிறிய அளவில் தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இங்குள்ள காடுகளில் விடுதலைப் புலிகள் பதுங்கியுள்ளனர் என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திக்குத் தெரியாத காட்டில் புலிகள் முகாம்

## கண்டுபிடித்ததாக அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் கஞ்சிக்குடியாறு பகுதியில் உள்ள திக்குத் தெரியாத காட்டில் நானூறு விடுதலைப் புலிகள் இருப்பதை ஸ்ரீலங்கா படையினர் கண்டுபிடித்துள்ளதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு கொங்கிரீட்டினாலான பதுங்கு குழிகளும், தடைகளும், சக்திவாய்ந்த கண்ணிகள், பொறிகள் என்பன காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இக்காட்டுப்பகுதியை படையினர் சுற்றிவளைத்துள்ளதால் புலிகளின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# வீரமாநகரில் 35 தமிழர்கள் ஊர்.கா. படையால் படுகொலை

(திருக்கோணமலை)

வீரமாநகரில் ஊர்காவற் படையினர் 35 பொது மக்களை வெட்டிக் கொன்றுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் பல பகுதிகளில் சிங்கள ஊர்காவற்படையினரும், சிங்கள ராணுவமும் சேர்ந்து அங்குள்ள அப்பாவி மக்களை தொடர்ந்து தாக்கியும், கொன்றும் வருகின்றனர்.

இம் மாவட்டத்திலுள்ள வீரமாநகர் எனும் ஊரினுள் பிரவேசித்த சிங்கள ஊர்காவற்படையினர் அங்கு முப்பத்தைந்து பேரை வெட்டியே கொன்றுள்ளார்கள். இதில் நான்கு, ஐந்து வயதுக் குழந்தைகளும் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# கோட்டைக்குள் பொட்டலங்கள் போடும்முயற்சியில் விமானங்கள்

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவமுகாமுக்குள் பொட்டலங்கள்போடுவதில் ஒருசில நாட்கள்இடைவெளியின் பின் மீண்டும் அவ்ரோ விமானங்கள் நேற்று ஈடுபட்டன.

இரண்டு அவ்ரோ விமானங்கள் மாறி மாறி ஒன்றன் பின் ஒன்றாக கோட்டைக்குள் கறுப்பு நிற பொட்டலங்களைப்போடுவதில் பகீரதப்பிரயத்தனம் செய்தன. இவ் விரு விமானங்களுக்கும் ஆதரவாக ஒரு ஹெலிகொப்டர் வானில் வட்ட மிட்டவாறு நகரையும் நகரை அண்டிய பகுதிகளையும் நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தவண்ணம் இருந்ததைஅவதானிக்கமுடிந்தது.

# மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவு கணக்காய்வு உதவி ஆணையாளர் பிரிவு வெளிக்கள உத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று பெண்கள் படுகொலை; இரு இளைஞர்கள் கைது!

(வவுனியா)

வவுனியாவில் ஒரே குடும்பத்தில் மூன்று பெண்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக விடுதலைப் புலிகளினால் இரு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா குருமன்காடு பகுதியில் இக் கொலைகள் இடம்பெற்றன.

இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைக்கு அஞ்சி, சமயபுரம் பகுதியில் தங்கியிருந்த குடும்பத்தில் தாயும், அவரது இருமகள்மாரும் குருமன்காடு பகுதியில் உள்ள தமதுதோட்டத்திற்கு சென்று அங்கு வேலை செய்து கொண்டிருந்த சமயமே அவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

தோட்டத்திற்குச் சென்ற மனைவியையும், மகள்மாரையும் காணாது அவர்களைத் தேடிச் சென்ற வீரமலை என்பவர் தனது மனைவியும், இருமகள்மாரும் தலையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களி[illegible] அரவணைப்பினாலேயே நாம் இந்[illegible]லையில் இருக்கிறோம்

**- மூர்த்தி**

(யாழ்ப்பாணம்)

அரசபடைகளின் ஹெலி விமானங்கள் தமிழீழத்தில் உள்ள சில பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் தரை இறங்க முடியாமல் இருக்கின்றன. கிளிநொச்சி,மாங்குளம், முல்லைத்தீவு, யாழ்நகர், காங்கேசன்துறை முகாம்களில் ஹெலிகள் இறங்க முடியாமல் தடுமாறுகின்றன. இன்று 25 பொலிஸ் நிலையங்களையும், 600 பொலிஸ்காரரையும் கைப்பற்றியும் கைதிகளாகவும் வைத்திருக்கின்றோம். இவ்வாறு நேற்று முன்தினம்சங்குவேலி சிற்றூர் அவை மக்கள் கூட்டத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

இடம் மாற்றம்

அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு சேவை செய்யும் முகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)


# இடம் பெயர்ந்த அகதிகளுக்கு உதவிட வேண்டும்

''அகதிகளாகஇடம்பெயர்ந்துள்ள அனைவருக்கும் உதவி வழங்க வேண்டும் உதவி வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். ஆடம்பரச் செலவினங்களை அடியோடு அகற்ற வேண்டும். தவிக்கும் மக்களுக்கு உதவுவதையே தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும் என்று சரசாலை இந்து இளைஞர் மன்றம் விடுத்துள்ள தமது விசேட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில்

இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ புனித தேவாலயங்களிலும், முஸ்லிம் புனித பள்ளிவாசல்களிலும் தொடர்ந்து அமைதிக்காகவும், வெற்றிக்காகவும் பிரார்த்தனைகளும் நித்திய பூசைகளும், வேண்டுதல்களும், தொழுகைகளும் இடம்பெற வேண்டும் இதன் மூலம் எமது நாட்டில் அமைதியையும், உயிரையும் பணயம் வைத்துப் போராடி வரும் எமது வீரர்களுக்கு சாந்தியையும், நல்ல சுகத்தையும் பெற நாம் எமது தொண்டைச் செய்ய முடியும். என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (35)

# அகதி முகாம்களுக்கு வேலணை உ. அ. அதிபர் நேரடி விஜயம்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கான நிவாரணம், சுகாதார வசதிகள் ஆகியன பற்றி ஆராய்வதற்காக உதவி அரசாங்க அதிபர் திரு. நா. தனபாலசிங்கம் தலைமையில்வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும், கிராம சேவையாளர்கள், சனசமூக நிலையங்கள் போரூட் ஸ்தாபனம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

யாழ். நகரிலிருந்தும், திருமலை, மாந்தை, வவுனியா ஆகிய இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்த 9030 குடும்பங்கள் வேலணை உ. அ. அதிபர் பிரிவில் 14 நிலையங்களில் தங்கி உள்ளன.

கடந்த வாரம் இக் குடும்பங்களுக்கான நிவாரணப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. உதவி அரசாங்க அதிபர் வியாழக்கிழமை சகல முகாம்களுக்கும் நேரடியாக விஜயம் செய்து அகதிகளின் வசதிகளை அவதானித்தார். புங்குடுதீவில் அமைந்துள்ள நான்கு முகாம்களிலும் உள்ள அகதிகளுக்கு உதவி அரசாங்க அதிபரே நேரடியாக நிவாரணப் பத்திரங்களை வழங்கினார்.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. செல்வரஞ்சன் அகதிகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை வழங்கினார்.

அகதிகளுக்கு உதவுவதில் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களும் ஆற்றி வரும் சேவை குறித்து உ. அ. அதிபர்நன்றி தெரிவித்தார். (75)

## கோரப்படாத பரிசில்கள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்மன் கோயிலில் இடம்பெற்ற அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் 45863, 2711, 34852, 38612, ஆகிய சீட்டுக்களையுடையோர் இதுவரை தமது பரிசில்களைக் கோரவில்லையாம். மேற்படி இலக்கங்களையுடைய சீட்டுக்களுக்கு முறையே 2 ஆம் பரிசிலிருந்து 5 ஆம் பரிசில்வரை கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு செல்ல வசதியற்றவர்கள் ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## பல்க. மாணவர் பொதுக் கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை (11-7-90) காலை 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. சகலமாணவர்களையும் சமுகம் தருமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது-

## அகதிகளுக்கு சிகிச்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்துள்ள சகல மக்களுக்கும் சகல வசதிகளையும் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கவனித்து வருகிறது. லயன்ஸ் கழகம் மருந்து வகைகளைக் கொடுத்து வருகிறது.

சாவகச்சேரியில் புனித விகோரியார் தேவாலயத்திலும், பாடசாலையிலும், சாவகச்சேரி உதயசூரியன் வீதியிலும் திருக்கோணமலைப்பகுதியிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களுக்கான அத்தியாவசிய மருத்துவச் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (35)

## கோழித்தீன் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோழித்தீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கோழித்தீன்களை வைத்திருக்கும் பெரும்பாலான கடை வியாபாரிகள் அதிகூடிய விலையில் விற்பதற்காகப் பதுக்கி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ். நகரப்பகுதியில் தற்பொழுது ஒரு பைக்கற் லேயர்ஸ் கோழித்தீனின்விலை ரூபாமுந்நூற்றிஇருபத்தைந்து வரை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

# ஆபிரிக்க பொருளாதார சமூகம் அமைக்க முன் முயற்சி

(அடிஸ்அபா)

ஆபிரிக்க பொருளாதார சமூகம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இது குறித்து விவாதமொன்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் மாநாட்டில் முக்கிய அம்சமாக விளங்கும்.

எதியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாவில் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் 27 வது மாநாடு நடைபெறவுள்ளது. இந்த ஸ்தாபனத்தில் 51 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த 51 நாடுகளும் ஆபிரிக்க பொருளாதார சமூகம் ஒன்று அமைக்கப்படுவது குறித்து பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பிராந்திய மற்றும் உள்நாட்டு பூசல்களுக்கு தீர்வு காணுதல் தென்னாபிரிக்காவில் தற்பொழுது மாற்றமடைந்து வரும் நிலைமை உட்பட பல விடயங்கள் இந்த 27 வது மாநாட்டின் போது மிகவும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

கறுப்பினத் தலைவரும், தென்னாபிரிக்க சோவியத் காங்கிரஸ் தலைவருமான திரு. நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் நிலை குறித்து ஆற்றவுள்ள பேருரை இம்மாநாட்டின் முக்கிய அம்சமாக அமையுமென கூறப்படுகின்றது.

# சகலரும் இன்றைய போரில் பங்கெடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)

''தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்ச நிலையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையிலே, பணம், பொருள் உதவிகள் மட்டும் வழங்கி விட்டால் போதாது. அனைவரும் தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டும். வீட்டிற்கொரு இளைஞன் எம்முடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களை வலுப்படுத்துங்கள்'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா கூறினார். மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கூட்டம் ஒன்றில் பேசும்போதே திரு. பாப்பா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார், அவர் தொடர்ந்து பேசுகையில் மண் மீட்பு போராட்டத்தின் ஓர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளோம். இன்று எமது இப்போராட்ட காலங்களில் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கிறார்கள். இவர்கள் பங்காளிகளாக மாறவேண்டும். பல தமிழ் இளைஞர்கள் இதை விட்டு ஒதுங்கி தென்னிலங்கைக்குச் சென்று கொழும்பு மாநகரில் பதுங்கிக் கொள்கிறார்கள். பலர் சிங்களக் காடையர்களின் ஆயுதங்களுக்குப் பலியாகிறார்கள். இந்த நிலமை மாறி சகல மக்களும் ஸ்ரீ லங்கா அரசுக்கு எதிராகல் போராட்டத்தில் ஈடுபடப் வேண்டும் என்றும் கூறினார்.

### அணு, ஆயுத தடுப்புக்குறித்து

# இந்தியாவுடன் விவாதிக்க பாகிஸ்தான் ஆர்வம்

(இஸ்லாமாபாத்)

தெற்காசியாவில் அணு ஆயுத பரவல் தடுப்பு நடவடிக்கை குறித்து இந்தியாவுடன் விவாதிக்க ஆர்வம் கொண்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இந்த ஆர்வத்தை அந்நாட்டு வெளியுறவு செயலாளர் தமிர் ஆமிர்கான் இஸ்லாமாபாத்தில் நிருபர்கள் மத்தியில்தெரிவித்துள்ளதுடன் மீண்டும் திரும்பி வர முடியாத ஒரு நிலைமையை இந்தியாவும், பாகிஸ்தானும் தேடிக்கொள்வதற்கு முன்பதாக இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டென்றும் நிருபர்கள் மத்தியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காஸ்மிர் பிரச்சினை, எல்லைகளில் படைகளை மீண்டும் நிறுத்துதல் ஆகிய விடயங்களில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவினும் கூட இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பாகிஸ்தான் தரப்பில் உயர்முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் வெளியுறவு செயலர்களின் மாநாடு அடுத்தவாரம் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைத் தமிழர் விடயத்தில்

# இந்தியாவின் கவலை குறித்து இலங்கை உணர வேண்டும்

(டில்லி)

''இலங்கைத் தமிழ் மக்களுக்காக இந்திய அரசு கவலைப்படுவதற்கான உண்மைகளை இலங்கை அரசு உணர்ந்து கொள்ளல் அவசியமாகும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் டில்லியில் நிருபர்கள் மத்தியில் தெரிவித் [illegible]

கிழக்கு தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து இந்தியா இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாக நிருபர்கள் மத்தியில் தொடர்ந்து கூறிய திரு. குஜ்ரால், தமிழ் அகதிகள் இந்தியாவில் குவிவதை தவிர்க்க வேண்டுமென்று இலங்கை வெளியுறவு அமைச்சின் செய [illegible]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

காசிப்பிள்ளை உதயகுமார்

(வசந்தன்)

தோற்றம்: 29-01-1967 மறைவு: 08-07-1987

திதி: 04-07-1990

அன்பிற்கு மூத்த மகனாக !
ஆசைக்கு ஓர் அண்ணனாக !
ஈழத்திற்கு ஓர் வேங்கையாக !
உலகம் போற்றும் உத்தமனாக !
வந்துதித்த உதயனே - நீ
மறைந்து மூன்றாண்டாகின்றன !

பெற்றோர், உறவினர், நண்பர்கள்.

கோப்பாய்.

(B. 1234)

## OFFICE EQUIPMENT LTD.

## இடமாற்றம்

140, நாவலர் வீதியில் இயங்கிய **OFFICE EQUIPMENT LTD.** ஸ்தாபனம் தற்காலிகமாகத் தனது அலுவலகத்தை இடமாற்றம் செய்துள்ளது.

பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்-

1. நம். 537, சிவன்கோவில் வீதி,
(CENTRAL NURSING HOME முன்பாக)
[illegible]

தொண்டர் ஸ்தாபனங்களும் ஆற்றி வரும் சேவை குறித்து உ. அ. அதிபர்நன்றி தெரிவித்தார். (75)

வருகின்றது. (35)

## கோரப்படாத பரிசில்கள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்மன் கோயிலில் இடம்பெற்ற அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் 45863, 2711, 34852, 38612, ஆகிய சீட்டுக்களையுடையோர் இதுவரை தமது பரிசில்களைக் கோரவில்லையாம். மேற்படி இலக்கங்களையுடைய சீட்டுக்களுக்கு முறையே 2 ஆம் பரிசிலிருந்து 5 ஆம் பரிசில்வரை கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு செல்ல வசதியற்றவர்கள் ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## பல்க. மாணவர் பொதுக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை (11-7-90) காலை 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. சகலமாணவர்களையும் சமுகம் தருமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது-

## கோழித்தீன் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோழித்தீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கோழித்தீன்களை வைத்திருக்கும் பெரும் பாலான கடை வியாபாரிகள் அதிகூடிய விலையில் விற்பதற்காகப் பதுக்கி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ். நகரப்பகுதியில் தற்பொழுது ஒரு பைக்கற் லேயர்ஸ் கோழித்தீனின்விலை ரூபாமுந்நூற்றிஇருபத்தைந்து வரை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

இந்தியாவும், பாகிஸ்தானும் தேடிக்கொள்வதற்கு முன்பதாக இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் இதேவேளை இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் வெளியுறவு செயலர்களின் மாநாடு அடுத்தவாரம் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைத் தமிழர் விடயத்தில்

## இந்தியாவின் கவலை குறித்து இலங்கை உணர வேண்டும்

(டில்லி)

''இலங்கைத் தமிழ் மக்களுக்காக இந்திய அரசு கவலைப்படுவதற்கான உண்மைகளை இலங்கை அரசு உணர்ந்து கொள்ளல் அவசியமாகும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் டில்லியில் நிருபர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து இந்தியா இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாக நிருபர்கள் மத்தியில் தொடர்ந்து கூறிய திரு. குஜ்ரால், தமிழ் அகதிகள் இந்தியாவில் குவிவதை தவிர்க்க வேண்டுமென்று இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரட்னாவிடம் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கைபடுகொலைக்குஅவுஸ். தமிழர் ஒன்றியம் கண்டனம்

(சிட்னி)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப் படுவதை அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கம் கண்டித்துள்ளதுடன், சர்வதேச அரசு இவர்கள் கொல்லப்படுவதை தடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச அரசாங்கம், அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப் படுவதை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை கேட்க வேண்டும் என்றும் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் ஒன்றியம் அந்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளது.


உலகம் போற்றும் உத்தமனாக !
வந்துதித்த உதயனே - நீ
மறைந்து மூன்றாண்டாகின்றன !

கோப்பாய்.

பெற்றார், உறவினர், நண்பர்கள்.

(B. 1234)



உங்கள் நீண்டகால பாவனைகளுக்குகந்த உறுதியான மரத் தளபாடங்கள்

இணுவிலில்

கட்டில் / கதிரைகள் / ஷோகேஸ் வகைகள் / செற்றிகள் / மேசைகள் / காரியாலய மேசைகள் / கண்ணாடி மேசைகள் / காரியாலய அலுமாரிகள்

இன்னும் பலபல தளபாடங்களின் மொத்த விற்பனையாளர்கள்....

நவரட்ணம் தச்சுத் தொழிற்சாலை

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,
இணுவில்.

(B. 1221)



OFFICE EQUIPMENT LTD.

இடமாற்றம்

140, நாவலர் வீதியில் இயங்கிய OFFICE EQUIPMENT LTD. ஸ்தாபனம் தற்காலிகமாகத் தனது அலுவலகத்தை இடமாற்றம் செய்துள்ளது.

பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்-

1. நம். 537, சிவன்கோவில் வீதி,
(CENTRAL NURSING HOME முன்பாக)
திருநெல்வேலி தெற்கு.

2. உருக்குத்தளபாட உற்பத்தித் தொழிற்சாலை
வேம்பன் றோட்,
(பெற்றோல் செட் முன்பாக)
உரும்பிராய்.

அலுவலக நேரம்: காலை 8.30 மணி தொடக்கம் பி. ப. 1.00 மணி வரை.

(B/ 1226)



மருந்துக்கடை இடமாற்றம்

இப்போதைய சூழ்நிலையில்
பாதுகாப்புக் கருதி
எமது ஸ்தாபனம்
கீழ்க்காணும் முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது

எங்களிடம்
அபிஷேகச் சாமான்கள் ✲ ஆயுள்வேத மருந்துகள்
✲ மருந்துச் சரக்குகள் ✲ வாசனைத் திரவியங்கள்
சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்றவகையில் பெற்றுக்கொள்ளலாம்.


புதிய விலாசம்

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்
4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)

(B/1201)





தரமிக்க உருக்கிலான தளபாடங்களுக்கு
நாட வேண்டிய ஸ்தாபனம்
"ஜனார்த்தன்ஸ்" இணுவில்

தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த உருக்கினாலான அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்

மற்றும்
காரியாலய வீட்டுத் தளபாடங்கள் அத்தனையும்
நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள
தாமதமின்றி நாடுங்கள்.

ஜனார்த்தன்ஸ் இண்டஸ்ரீஸ்
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

(B/ 1208)

சிந்தனைக்கு

எழுமின், விழிமின் இலட்சியத்தை
எய்தும்வரை ஓயாதீர்.

-சுவாமி விவேகானந்தர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# முதலில் பாதுகாப்பு அப்புறம்...

"வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டால் மட்டுமே இப்பகுதியில் ஏற்படும் உயிர்ச்சேதம் பொருட்சேதத்தைத் தடுக்கமுடியும்'' என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருக்கிறார்.

புத்தளத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையிலேயே சிறிலங்கா ஜனாதிபதி மேற்கண்டவாறு மிரட்டியிருக்கிறார்.

ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும்; ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்; ஆயுதங்களை ஒப்படைத்து சரண் அடைந்தாலே பேச்சுவார்த்தை யுத்தநிறுத்தம் என்று ஜே. ஆர். ஜேயவர்த்தனா, லலித் அத்துலத்முதலி, இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி, இப்போது ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோரும், ஏன் பிரேமதாசாவும் கூட பாடிவந்த, பாடிக்கொண்டிருக்கும் பழைய பல்லவிதான்.

ஒரு வித்தியாசம். விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டால் மட்டுமே வடக்குக்கிழக்கில் ஏற்படும் உயிர்ச்சேதத்தையும் உடைமைச் சேதத்தையும் தடுக்முடியுமென்று தமது நடவடிக்கையை இப்போது பிரேமதாசா பகிரங்கமாக ஒப்புக்கொண்டுடிருக்கிறார்.

இப்பொழுது நடைபெறும் போர் விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்குமிடையில் நடைபெறும் போரேயொழிய தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்லவென்றும் நீதிக்கும் அநீதிக்குமிடையில் நடைபெறும் போர் என்றும் கூறி வந்தவர் பிரேமதாசா.

இன்று விடுதலைப்புலிகள் இராணுவநடவடிக்கையைக் கைவிட்டாலே வடக்குக் கிழக்கில் உயிர், உடைமைகளுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுக்க முடியுமென்று பிரேமதாசா கூறுகிறாரென்றால் தமிழ் மக்களின் உயிரையும் உடைமையையும் இப்பொழுது அழித்துக்கொண்டுதான் இருக்கிறோம்; தமிழ் மக்களுக்கு எதிராவே போர் புரிகின்றோம் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார் என்பதுதான் அர்த்தம். தொடர்ந்தும் தமிழ் மக்களின் உயிரையும் உடைமையையும் அழிப்போம் என்று ஒருபடி மேலே சென்று பயமுறுத்துகிறார்; அவ்வளவுதான்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி கொழும்பு காலிமுகத்திடலில் நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் மீது சிங்களக் குண்டர்கள் தாக்குதல் நடத்தியபோதும் அதைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும் அம்பாறை, இங்கினியாகலையிலும் தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்ட போதும் அடுத்து 1958ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டுவரை காலத்துக்குக்காலம் சிங்களக்காடையர்களும் ஆயுதப்படையினரும் தமிழ்மக்களைப் படுகொலைசெய்தும் தமிழ்ப்பெண்களை மானபங்கம்செய்தும் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் அநாதைகளாக, அகதிகளாகத் தங்கள் தாயகத்துக்கு கப்பல்களில் அனுப்பிவைக்கப்பட்ட சமயங்களில் அச்செயல்களைக் கண்டித்து அடக்கி,

# பௌத்த சிங்கள பேரினவாதத்தின் வெளிப்பாடே இன்றைய யதார்த்தம்

இனம், மதம், மொழி என்றஅடிப்படையில் மக்களைப் பிரிக்கக்கூடாது என்று தத்துவம் பேசியவர் தான் தற்போதைய சிறிலங்காவின் அதிஉத்தம ஜனாதிபதியான திரு. ரணசிங்க பிரேமதாசா அவர்கள்.

## வெறுமனே பிரேமாவின் நடவடிக்கை மாத்திரம் தானா?

அதே பிரேமதாசாவின் ஏவுதலில் தான் இன்று வான், கடல், தரை படைகளாலும், சிங்களக் காடையர்களாலும் மொத்தத் தமிழ் மக்களும் அழிக்கப்பட்டு வருவதுடன்; அவர்களது சொத்துக்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்மக்கள் மீதும், அவர்கள் தம் சொத்துக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அழிப்பு நடவடிக்கைகளை பிரேமதாசாவின் குணாம்சத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் வெளிப்பாடு என்று நாம் வெறுமனே கூறிவிட முடியாது. மாறாக சிறிலங்கா அரசு என்னும் இயந்திரத்தின் தன்மை இதுவென்பதை நாம் விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும்.

## பிரதான முரண்பாடு

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இன்றைய காலகட்டத்தில் மேவி நிற்பது இனங்களுக்கிடையிலான முரண்பாடே பிரதானமானதாகும். அதாவது அடக்கும் இனத்துக்கும், அடக்கப்படும் இனத்துக்கும், ஆளுமைய நடத்தும் இனத்துக்கும், ஆளுமைக்குட்பட்ட இனத்துக்கும் இடையிலான முரண்பாடாகும். இதனை நாம் இங்கு பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடாகக் காண முடிகின்றது.

## பௌத்த சிங்கள பேரினவாதம்

பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான இந்த முரண்பாட்டின் தோற்றமானது இலங்கையில் முதலாளித்துவத்தின் உருவாக்கத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படினும் கூட, துட்டகைமுனு-எல்லாளன் காலத்திலேயே இந்தமுரண்பாடு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பதுவே உண்மை வரலாறாகும்,

> பௌத்த சிங்களபேரினவாதத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதலாளித்துவத்தின் உருவாக்கத்துடன் தொடர்புபடுத்தப்படினும் கூட; துட்டகைமுனு எல்லாளன் காலத்திலேயே இது ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இன்று இந்த துட்டகைமுனுவின் வரலாறு சிங்கள பௌத்தத்தின் எழுச்சிப்படலமாக கொள்ளப்படுகின்றது. துட்டகைமுனுவின் வரலாறு சிங்கள சிறார்களின் ஆரம்பக்கல்வியின் ஒரு பாடமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போக்கானது சிங்கள மன்னனான துட்டகைமுனு தமிழ் மன்னனுக்கு எதிராக மட்டுமன்றி, தமிழ்மக்களுக்கும் எதிராகப் போரிட்டு வெற்றிகொண்டவன் என்ற பக்கத்திலேயாகும். இதன் மூலம் துட்டகைமுனுவின் காலத்திலேயே பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பதுவே உண்மையாகும்.

## பகைமுரண்பாடே அன்றி சிநேக முரண்பாடல்ல

புராதனக் காலத்திலேயே உருவாகிவிட்ட இந்த முரண்பாட்டுக்கு சிறிலங்கா அரசு தொடர்ந்துபுத்துயிர் அளித்து வருவதுடன் காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளை வலுப்படுத்தி வருவதையும் அறிவோம். இந்தப் போக்குகளின் நிமித்தம் பௌத்த சிங்களத்திற்கும், தமிழ் மக்களுக்கும் இடையே சிநேக உறவு உருவாகாது பகைமை உறவே மேவி நிற்கும் யதார்த்த நிலைமை இன்று நிலவுகின்றது.

இவ்வாறான ஒரு முரண்பாட்டுத் தன்மையைக் கொண்ட சிறிலங்கா அரசு என்னும் இயந்திரம் ஒரு பௌத்த சிங்கள பேரினவாத அமைப்பே ஆகும். இந்த அமைப்பின் தலைவர்களான டட்லி சேனநாயக்காவாயினும்சரி, எஸ். டப்ள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவாயினும்சரிஅல்லதுஇன்றையஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவாயினும் சரி அனைவரும் சிங்களப் பேரினவாதத்தின் பாதுகாவலர்களே அன்றி தூய்மையானவர்கள் அல்ல.

## தமிழ்த் தலைவர்களின் வர்க்க குணாம்சம்

தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்படும் சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்றோர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும்இடையிலான இந்தமுரண்பாட்டை சரியாக விளங்கிக் கொள்ளாமலேயே ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்காக செயற்பட்டார்கள். இது அவர்களது வர்க்கத் தன்மைக்கு ஏற்ப உருவாகிய ஒரு குணாம்சமே ஆகும்.

## தேசிய ஒருமைப்பாடும் யதார்த்தமும்

மேலும் ஸ்ரீலங்காவை சேர்ந்த எந்தவொரு சிங்களத் தலைவராயினும் சரி, சிங்கள இயக்கங்களாயினும்சரி தேசிய ஒருமைப்பாடு குறித்து எத்துணைத் தூரம் வாய்கிழிய பேசினும் கூட அவர்களால் அங்கு மேவி நிற்கும் பௌத்த சிங்கள பேரினவாதத்தை உடைத்துக் கொண்டு எதிர் நீச்சல் போடும் வல்லமை இல்லாமல் போனதுடன், அப்படியானதொரு யதார்த்த நிலைமை அங்குஇல்லை என்பதையும் நாம் அறியலாம்.

இரட்டைக் கலாநிதியான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தன போன்றவர்கள் வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும், தேசிய ஐக்கியத்தைப் பற்றியும் பேசியவர்கள் தான். செயல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தான். இருந்தும் சிறீலங்காவின் யதார்த்த நிலைமையை உடைத்துக் கொண்டு வெளிவர முடியாத நிலையில் பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு உள்வாங்கப் பட்டவர்களாய் தம்மை மாற்றிக் கொள்ளும் நிலைமைக்கு உருவானார்கள் என்பதை நாம் வரலாறு மூலம் காணமுடிகின்றது.

இன்னும் ,சிறிலங்கா முதலாலித்துவ அரசுக்கு எதிராக போராடி இங்கொரு சோசலிஷ ஆட்சியை உருவாக்கப் போவதாக புறப்பட்ட ஜே. வி. பி. யினரும் கூட 1972 ஆம் ஆண்டுகாலக்கட்டத்தில் தேயிலைபானம்அருந்துவதை தமது இயக்கத்துக்குள் தடை செய்திருந்தார்கள். இதற்கு அவர்கள் கொடுத்த விளக்கம் தேயிலை இந்திய வம்சாவழி தமிழ் மக்களால் உருவாக்கப் பட்டது என்பதே ஆகும்.

தேயிலைப்பானத்தை அருந்துவதை தடை செய்தது இந்திய தேச விஸ்தரிப்பு நடவடிக்கைக்கு எதிரான ஒரு போக்கே என்று அந்த இயக்கத்தால் விளக்கம் கொடுக்கப்பட்டப் போதும்;இச் செயலானது சிறிலங்காவில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கூடாக எழுந்த இன வெறிப் போக்கேஇதுவாகும்.

இது வரை நாம் தொகுத்துப் பார்த்தவற்றிற் கூடாக தமிழ்மக்கள்மீது நடத்தப்பட்ட,நடத்தப்பட்டு வருகின்ற அனைத்து அடக்கு முறைகளும், அனைத்து தாக்குதல்களும் ரணசிங்க பிரேமதாசா உள்ளிட்ட சிங்களத் தலைவர்களின் குணாம்ச மாற்றத்தின் வெளிப்பாடு என்று மாத்திரம் கொள்ளல் முடியாது. அப்படிக் கொள்வோமாகில் அது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் உண்மையான உருவத்தை நாம் விளங்கிக் கொள்ளாமையின் வெளிப்பாடாகவே இருக்கும். எனவே இந்தப் போக்கு அமைப்புரீதியாக பௌத்த சிங்கள பேரினவாதத்தின் திட்டமிடப்பட்ட குணாம்சத்தின் வெளிப்பாடுகளே ஆகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் அவசியமாகும்.

மாத்தளையான்

# பிரிட்டிஷாரிடம் ஒல்லாந்தரின் கோட்டை சரிந்தது!

போர்த்துக்கேயர் கட்டிய முடிக்கப்பட்டபோது ஒரு

பட்டாளத்தின் தளபதி வசிப்பதற்கென வசதியான மாளிகையொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தங்குவதற்கும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றை

கொண்ட நட்சத்திர வடிவில் அமைந்துள்ள இக் கோட்டையைச் சூழ சுரி நிறைந்த அகழிகள் அமைந்துள்ளன.

நூற்றி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இக் கோட்டையில் இருந்து ஆட்சிபுரிந்த ஒல்லாந்தர் 1795 ஆம் ஆண்டில் அமைதியாக பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனியாரிடம் சரண் அடைந்தனர்.

அல்லவென்றும் நீடிக்கும் அநீதிக்குமிடையில் நடைபெறும் போர் என்றும் கூறி வந்தவர் பிரேமதாசா.

இன்று விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டாலே வடக்குக் கிழக்கில் உயிர், உடைமைகளுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுக்க முடியுமென்று பிரேமதாசா கூறுகிறாரென்றால் தமிழ் மக்களின் உயிரையும் உடைமையையும் இப்பொழுது அழித்துக்கொண்டுதான் இருக்கிறோம்; தமிழ் மக்களுக்கு எதிராவே போர் புரிகின்றோம் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார் என்பதுதான் அர்த்தம். தொடர்ந்தும் தமிழ் மக்களின் உயிரையும் உடைமையையும் அழிப்போம் என்று ஒருபடி மேலே சென்று பயமுறுத்துகிறார்; அவ்வளவுதான்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி கொழும்பு காலிமுகத்திடலில் நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் மீது சிங்களக் குண்டர்கள் தாக்குதல் நடத்தியபோதும் அதைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும் அம்பாறை, இங்கினியாகலையிலும் தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்ட போதும் அடுத்து 1958ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டுவரை காலத்துக்குக்காலம் சிங்களக்காடையர்களும் ஆயுதப்படையினரும் தமிழ்மக்களைப் படுகொலைசெய்தும் தமிழ்ப்பெண்களை மானபங்கம்செய்தும் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் அநாதைகளாக, அகதிகளாகத் தங்கள் தாயகத்துக்கு கப்பல்களில் அனுப்பிவைக்கப்பட்ட சமயங்களில் அச்செயல்களைக் கண்டித்து அடக்கி, இச்செயல்களில் ஈடுபட்டவர்களைத் தண்டித்து சிறுபான்மைத் தேசிய இனமான தமிழ் மக்களுக்கு சிங்களத் தலைவர்கள் நீதி நியாயம் வழங்கி இருந்திருந்தால் இன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி நிற்கவேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காதே!

1956 ஆம் ஆண்டுமுதல் 1983 ஆம் ஆண்டுவரை சிங்களக் காடையர்களும் ஆயுதபடையினரும் தமிழ் இனத்தை அழித்தொழிக்க எடுத்த முயற்சிகளைத் தலைவர்களும் சிங்கள பௌத்த பேரினவாதப் பத்திரிகைகளும் ''தமிழனுக்கு இது போதாது; இன்னும் வேண்டும்'' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

''குட்டக்குட்டக் குனிகிறவனும் மடையன், குனியக் குனியக் குட்டுகிறவனும் மடையன்'' என்ற தமிழ் முதுமொழியின் அர்த்தத்தை இப்பொழுதுதான் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள பௌத்த பேரினவாதப் பந்திரிகைகளும் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கி இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே போடச் சொல்லுவதும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தச் சொல்வதும் கேலிக்கூத்து; இன்றுள்ள நிலையில் இப்படிச் சொல்பவர்கள் மனநோயாளிகளாகத்தான் இருக்கமுடியும்.

இந்த நிமிஷத்தில்கூட ஆயுதப்படைகளும் அவர்களுடன் சிங்களக் காடையர்களும் இன அழிப்பிலீடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தை அழித்து ஒழிப்பதற்கு கோடிக்கணக்கில் அரசு நிதி ஒதுக்கி ஆயுதங்களை வாங்குகிறது; சிங்கள இளைஞர்களை தமிழருக்கு எதிராகப் போர் புரிவதற்குப் படை திரட்டுகிறது.

யாழ். குடாநாட்டின் மீது மும்முனைத்தாக்குதலுக்கு ஆயத்தம் செய்வதாக இராணுவ அதிகாரிகளே தெரிவித்து உள்ளனர்.

தமிழ் மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகள் ஆக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு உணவு, உடை, மருந்து எதுவும் வழங்க அரசு முன்வரவில்லை; இதற்கு தனது ஊதுகுழல்கள் மூலம் நொண்டிச் சாட்டுச் சொல்லி உலகை ஏமாற்றுகிறது அரசு.

தமிழினத்தை ஆயுதப் படைகளைக் கொண்டும் சிங்களக் காடையர்களைக் கொண்டும், சிங்களக் கிராம வாசிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தும் அழிக்க முற்படுவதுடன் தமிழ் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத்தடையைக் கொண்டு வந்து பட்டினி போட்டும் கொல்லலாம் என நினைக்கிறது சிறிலங்கா சிங்கள பௌத்த அரசு!

சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு எதிராக இது போன்ற செயல்களில் ஈடுபட்ட எந்த அரசும் நிலை பெற்றதில்லை என்பது வரலாறு.

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழும் நிலை ஏற்பட்ட பின்னரே விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க முடியும் என்பதை சிறிலங்கா அரசு உணர்ந்து கொள்ளட்டும்.

---

பாடே பிரதானமானதாகும். அதாவது அடக்கும் இனத்துக்கும், அடக்கப்படும் இனத்துக்கும், ஆளுமைசெய நடத்தும் இனத்துக்கும், ஆளுமைக்குட்பட்ட இனத்துக்கும் இடையிலான முரண்பாடாகும். இதனை நாம் இங்கு பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையி

வெற்றிகொண்டவன் என்ற பக்கத்திலேயாகும். இதன் மூலம் துட்டகைமுனுவின் காலத்திலேயே பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பதுவே உண்மையாகும்.

திபதி ரணசிங்க பிரேமதாசாவாயினும் சரி அனைவரும் சிங்களப் பேரினவாதத்தின் பாதுகாவலர்களே அன்றி தூய்மையானவர்கள் அல்ல.

**தமிழ்த் தலைவர்களின் வர்க்க குணாம்சம்**

தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்படும் சேர் பொன்.

டிக்கையில் ஈடுபட்டவர்கள் தான். இருந்தும் சிறீலங்காவின் யதார்த்த நிலைமையை உடைத்துக் கொண்டு வெளிவர முடியாத நிலையில் பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு உள்வாங்கப் பட்ட

கவே இருக்கும். எனவே இந்தப் போக்கு அமைப்புரீதியாக பௌத்த சிங்கள பேரின வாதத்தின் திட்டமிடப்பட்ட குணாம்சத்தின் வெளிப்பாடுகளே ஆகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் அவசியமாகும்.

---

# பிரிட்டிஷாரிடம் ஒல்லாந்தரின்

# கோட்டை சரிந்தது!

## யாழ்ப்பாணக் கோட்டை உருவான வரலாறு - 3

கோட்டைக்குள் பட்டினியாலும், நோயினாலும் இறந்தவர்கள் போக சரணடைந்த எஞ்சிய போர்த்துக்கேயர்கள் ''கௌரவமாக'' கோட்டையிலிருந்து வெளியேறினர். தமது பாதுகாப்புக்காக கட்டிய கோட்டையே தம்மைவிட சக்தி வாய்ந்த ஒல்லாந்தரிடமிருந்து அவர்களை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. வியாபாரிகள் என்ற போர்வையில் வந்த போர்த்துக்கேயர் சகல வற்றையும் இழந்து வெளியேறினர்.

போர்த்துக்கேயர் கட்டிய யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் அந்த இடத்தில் வலுவான பெரிதான ஒரு கோட்டையை அமைப்பதில் ஈடுபட்டனர். இன்று யாழ்ப்பாணத்தில் நாம் காணும் கோட்டை ஒல்லாந்தர் அமைத்த கோட்டையாகும். வேறு இடங்களில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டைகள் எல்லாவற்றையும் விட யாழ்ப்பாணக் கோட்டை நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டது. இது தனித்துவமான கோட்டை இந்தக் கோட்டை இறுதியாகக் கட்டி முடிக்கப்பட்டபோது ஒரு நூற்றாண்டு முடிந்தது. யாழ்ப்பாணக் கோட்டை வலுப்பெற்ற கோட்டையாக அமைந்தது. கோட்டையின் உட்பகுதியில் தொண்ணூறு பீரங்கிகளும் வெளிப்புறம் நோக்கி ஐம்பத்திரெண்டு பீரங்கிகளும் பொருத்தப்பட்டிருந்தன. கோட்டைக்குள் சிறந்த வீரர்கள் பலர் இருந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் பிரதான வாயிலில் உள்ள இரும்புக் கதவு மிக உறுதி வாய்ந்ததாகும். இந்தக் கதவிலுள்ள இரும்புக் கம்பிகளின் நுனிப்பாகம் வேல் போன்று கூர்மையுடையதாகும். கோட்டைக்குள் காவலர் அறைகளும் போர் வீரர்கள் வசிப்பதற்கான அறைகளும் கோட்டைச் சுவர்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன பட்டாளத்தின் தளபதி வசிப்பதற்கென வசதியான மாளிகையொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தங்குவதற்கும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றையும்விட யாழ்ப்பாணக் கோட்டைக்குள் கட்டப்பட்டுள்ள தேவாலயம் சிறப்பு வாய்ந்தது. ஒல்லாந்தரின் சிற்பக் கலை முறையில் அமைக்கப்பட்டுள்ள இத் தேவாலயம் சிதைவுறாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று பலவருடங்களுக்கு முன்னரே பலரும் குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். அகலமான, உயரமான சுவர்களைக் கொண்ட இந்தக் கோட்டைக்கு கடல் பக்கமாகவும் ஒரு வாயில் இருக்கிறது. பிரதான வாயில் கதவை விட இது சற்றுச் சிறியதாகும். ஐந்து முனைகளைக் கொண்ட நட்சத்திர வடிவில் அமைந்துள்ள இக் கோட்டையைச் சூழ சுரி நிறைந்த அகழிகள் அமைந்துள்ளன.

நூற்றி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இக் கோட்டையில் இருந்து ஆட்சிபுரிந்த ஒல்லாந்தர் 1795 ஆம் ஆண்டில் அமைதியாக பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனியாரிடம் சரண் அடைந்தனர். ஐரோப்பிய அரசியல் சூழ்நிலை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனியின் பலத்தை ஒல்லாந்தருக்கு உணர்த்தியிருந்தது. ஒரு கல்லுக் கூட வீசாமல் யாழ்ப்பாணக் கோட்டைபிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனியாரிடம் வீழ்ச்சியடைந்தது. கோட்டையைச் சூழவும் கோட்டைக்குள்ளும் பொருத்தப் பட்டிருந்த நூற்றி நாற்பத்திரெண்டு பீரங்கிகளில் ஒன்று கூட குண்டு வீசாமல் ஒல்லாந்தர் பிரிட்டிஷாரிடம் சரணடைந்தனர்.

(முற்றும்)

**செய்திக்கதிர் 15 - 03 - 1986 இதழில் வெளிவந்த கட்டுரையின் மறுபிரசுரம்**

---

# சோவியத், சீனாவுக்கான உதவிகுறித்து

# தொழில் வள நாடுகள் பரிசீலனை

(பூஸ்டன்)

உலக பொருளாதார நிலைமை: சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்குமான மேற்குலக பொருளாதார உதவிகள் பற்றிய விடயங்கள் தொழில் வள நாடுகளால் விரிவாக பரிசீலிக்கப்படவுள்ளது.

தொழில் வளம் கொண்ட ஏழு நாடுகளினதும் உச்சி மாநாடு நேற்று அமெரிக்கநகரமான பூஸ்டனில் ஆரம்பமானது. மூன்று நாட்கள் இடம் பெறும் இந்த உச்சி மாநாட்டிலேயே மேற்குறித்த விவாதங்கள் நடத்தப்படவுள்ளது.

சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்குமான மேற்குலக பொருளாதார உதவி பற்றிய விடயத்தில் தொழில் வள நாடுகளில் ஒன்றான யப்பான் சீனாவுக்கு ஆதரவு செலுத்தி வரும் அதேவேளையில் பிரான்ஸ், மேற்கு ஜேர்மன் ஆகிய நாடுகள் சோவியத் யூனியனுக்கு பெருமளவு உதவிகள் வழங்கப்படல் வேண்டுமென்று கோரியுள்ளது.

சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளுக்கான பொ... ளாதார உதவிபற்றிய வி... யத்தில் யப்பான், பிரான்... மேற்கு ஜேர்மன் ஆகியவை இவ்வாறான நிலப்பாட்டினை கொண்டிருப்பினும், அமெரிக்காவும், பிரிட்டனும் இந்த உதவி குறித்த விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமது அரசியல் பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கு உதவிட கோரி திரு கொர்பசேவ் அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோர்ஜ் புஸ்ஸின் தேசிய பந்தோபஸ்து ஆலோசகரான திரு. ...ாண்ட்ஸ் நொக்கராலுக்கு ...யாக வேண்டுகோள் ...ளை விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளில் தனது பொருளாதார சீர் திருத்தத் திட்டத்துக்கு அவசியமான பொருளாதார நிலைமைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் தொழில் வள நாடுகளால் நடத்தப் படும் இந்த மூன்று நாள் உச்சிமகாநாட்டில் சோவியத் யூனியனுக்கான பொருளாதார உதவிகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

## இலங்கைக்குழு டில்லி பயணம்

(கொழும்பு)

இலங்கையின் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய பத்துப் பேர் கொண்ட தூதுக் குழுஒன்றுடில்லிசெல்லவுள்ளது சபாநாயகர் எம். எச். மொகமட் தலைமையில் செல்லும் இக்குழு நான்கு நாட்கள் டில்லியில் தங்கியிருக்கும். தற்பொழுது இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து சார்க் அமைப்பு நாடுகளுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் முதலாவது நடவடிக்கையே இந்த டில்லி பயணமாகும்.

Registered as a News at Paper the G. P. O.

ஈழநாதம்

கிளிநொச்சி மாவட்டத்தில்

# போதிய மருந்து வசதியின்றி சில நோயாளர்கள் மரணம்

கிளிநொச்சிப் பகுதியில் போதிய வைத்திய வசதிகள் இல்லாததாலும் போக்கு வரத்து வசதிகள் இல்லாததாலும் இருவர் அநியாயமாக உயிர் இழந்துள்ளனர். வேறு பலரும் உயிர் இழந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஜூன் மாதம் 13 ஆம் திகதி கிளிநொச்சி பகுதியில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை செயலிழந்தது. அதைத் தொடர்ந்து மேற்படி வைத்தியசாலை முரசுமோட்டைக்கு மாற்றப் பட்டது.

கலவரத்தால் பாதிக்கப் பட்ட மக்கள் முரசுமோட்டை, உருத்திரபுரம், வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலுள்ள மருந்து வகைகள், கட்டில்கள் மற்றும் பொருட்களை மேற்படி வைத்தியசாலையிலிருந்து வெளியே எடுக்க இராணுவம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

இந்த நிலையில் முரசுமோட்டை வைத்தியசாலைக்கு தினமும் 300 க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர் குணரத்தினம் ஒருவர் மட்டுமே கடமை புரிகிறார்.

கடும் நோயாளர்கள் பலர் தினமும் சிகிச்சைக்கு வருவதால் அவர்களை வார்ட்டில் வைத்து சிகிச்சை அளிக்க கட்டில்கள் இல்லாததாலும், இரவில் தங்கியிருந்து சிகிச்சை அளிக்க டாக்டர்கள் இல்லாததாலும் வார்ட்டில் அனுமதிக்கப்பட வேண்டிய நோயாளர் பலர் திருப்பி அனுப்பப் படுகின்றனர்.

முரசுமோட்டை ஆஸ்பத்திரியில் 3 தாதிமார் மட்டுமே இருந்து இரவு பகலாக கடமையாற்றி வருகின்றனர். போதிய தாதிமார்கள் இல்லாததால் நோயாளருக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட முடியாதுள்ளது. இதனால் நோயாளர்கள் பலர் பலமணி நேரம் வைத்தியசாலையில் சிகிச்சைக் காகக் காத்திருக்கின்றனர்.

போக்குவரத்து வசதியில்லாததாலும், தர்மபுரம் ஆஸ்பத்திரி பாதிக்கப்பட்டுள்ளதாலும் வேண்டிய சிகிச்சையைப் பெறமுடியாத நிலையில் 20 வயது இளம் பெண் ஒருத்தி மரணமானார். இவர் கடந்த சில நாட்களாக சுகயீனமுற்றிருந்தார்.

அதே போன்று உதய நகரைச் சேர்ந்த 8 மாதப் பெண் குழந்தை ஒன்றும் நோயுற்ற சில நாட்களிலேயே மரணமானது. போதிய வைத்திய வசதி இல்லாததாலேயே இக் குழந்தை இறந்துள்ளது.

இது போன்ற பல மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (49)

## தென்மராட்சியில் அகதிகள் தொகை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

வெளி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிக்கு அகதிகளாக வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. மொத்தம் 27 ஆயிரம் அகதிக் குடும்பங்கள் இப்பகுதியில் உள்ள ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கான ஒரு வார நிவாரண அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் உணவு வசதிகளைச் சாவகச்சேரி வர்த்தகர் சங்கமும், உடுபுடைவை மற்றும் சகல தேவைகளையும் தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகமும், சுகாதார வசதிகளைத் தென்மராட்சி மருத்துவப் பிரிவும் கவனித்து வருகின்றன. (24)

## மீட்பு நிதி விளக்கம்

தமிழீழ மீட்பு நிதிக்கான ஆரம்பக் கலை நிகழ்ச்சிகளையும், விளக்கங்களையும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட மாணவர் இயக்கம் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வழங்கி வருகிறது.

நேற்று ஒட்டுமடம், ஐந்து சந்தி, ஆனைப்பந்தியடி, நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோயிலடி, தட்டாதெரு, பிறவுண் றோட், புங்கன்குளம் சந்தி, தபால் கட்டை சந்தி, கனகரத்தினம் வீதி, நாச்சிமார் கோயிலடிப் பகுதிகளில் நிகழ்ச்சிகளை வழங்கினர்.

## பயிலுநர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க

போர்க்கால

## கிழக்கில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார்.

வடமாகாணத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

அனுராதபுரம் தொடக்கம் ஆனையிறவு வரையிலான பாதைகளை படையினர் துப்பரவு செய்கின்றனர்.

மன்னார் பகுதியை நோக்கியும் படையினர் சென்று கொண்டிருக்கின்றனர்.

மக்களின்

# சனசமூக நிலையங்கள் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்கள் மூலமாக வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு அத்தியாவசியவசதிகளை செய்து கொடுக்கும் பொருட்டும், யுத்தத்தில்குடா நாட்டு மக்கள்நடந்துகொள்ள வேண்டிய வழிவகைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டும் சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா ஆலோசனைக் கூட்டங்களை ஒழுங்கு செய்து வருகிறார்.

மேலும் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு சார்பற்ற மனிதநேய நிறுவனங்களில் சேவைபுரியும் அலுவலர்களை ஒன்றுசேர்த்து ஒவ்வொருகுழுக்களாக அந்தந்தப் பிரதேசங்களில் செயல்படுத்துவதற்கும் இக்குழுக்களின் செயற்பாட்டுக்கு ஆலோசனைவழங்குவதற்கும்தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஒவ்வொரு பகுதிகளிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலோசனை பெறவிரும்பும் எந்த சனசமூக நிலையஅங்கத்தவர்களும் தமிழீழ ஆய்வுநிறுவனத்தால் ஒழுங்கு செய்யப் பட்ட இக்குழுக்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.

### முதலுதவிப் பயிற்சி

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தங்களின் போது சரியான முறையில் பொது மக்களுக்குமுதலுதவிப்பயிற்சி இல்லாமையாலேயே பெரும் பாலான இறப்புக்கள் ஏற்பட்டன. ஆகையால் ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலும் குறைந்தது பத்துப்பேருக்காவது முதலுதவிப் பயிற்சிநெறி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தமுதலுதவிப் பயிற்சிநெறியைப் பயில விரும்பும் சனசமூக நிலையங்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், அந்தந்தப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரில் எவருடனும் தொடர்பு கொள்ளுமிடத்து இப்பயிற்சி நெறியை ஒழுங்கு செய்யலாம்.

### இரத்ததானம்

சனசமூகநிலையங்கள் மூலம் வைத்தியசாலைகளில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இரத்ததானம் செய்யவிரும்புவோர் தமது இரத்தத்தை பரிசோதித்து, சனசமூக நிலையங்கள் மூலம் காத்திருப்போர் பட்டியலில் பெயர் குறிப்பிட்டு எந்நேரமும் ஆயத்த நிலையில் இருக்க வசதி செய்து கொடுக்கப் படும்.

### பதுங்கு குழி அமைத்தல்

பொதுமக்கள் கூடும் இடங்களான சந்தை, கோயில்கள், நூலகங்கள் போன்ற இடங்களிலும் முக்கிய சந்திகளிலும் பதுங்கு குழி அமைப்பது பற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### வீட்டுத் தோட்டம்

தமிழ் பேசும் மக்களின் பொருளாதார வாழ்வை யுத்த காலத்தில் மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு சனசமூக நிலைய அங்கத்தவர்களும் வீட்டுத்தோட்டம் அமைப்பதுடன் குறுங்கால பயிர்களை அவற்றில் நாட்டுவது பற்றியும் ஏனைய பொது மக்களையும் வீட்டுத் தோட்டத்தில் பங்கேற்று தத்தமது வீடுகளில் அவற்றை அமைப்பது சம்பந்தமாகவும். ஒவ்வொரு சனசமூக நிலைய அங்கத்தவர்களையும்சந்தித்து அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகதிரு. டிவகலாலா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மத்திய குழு பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கை இங்கு அப்படியே முழுமையாகத் தரப்படுகிறது.

## தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

தமிழீழம்
09 -07-1990

# இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்க இளைஞர்களே தமிழர் இராணுவத்தில் சேருங்கள்

சிறீலங்கா இராணுவம் என்பது ஏனைய நாடுகளில் இருப்பது போன்று நாட்டின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்ட தேசிய இராணுவம் அல்ல;

அது தனிச்சிங்கள இராணுவம்.

சிங்களவர்களினால் சிங்களவர்களைப் பாதுகாக்க என அமைக்கப்பட்ட சிங்களவர்களையே கொண்ட இராணுவம்.

அந்த இராணுவம் இதுவரை எந்த நாட்டுப் படைகளுடனும் போராடவில்லை. தமிழ்பேசும் மக்கள் மீது தான் பலதடவைகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது

சிறீலங்கா இராணுவம்

தமிழ்பேசும் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது.

தமிழ்பேசும் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களில் ஏராளமானோரை அகதிகளாகவும், அனாதைகளாகவும் ஆக்கியிருக்கிறது.

இந்த நிலையில் முரசு மோட்டை வைத்தியசாலைக்கு தினமும் 300 க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சை அளிப்ப

**கிழக்கில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார்.

வடமாகாணத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

அனுராதபுரம் தொடக்கம் ஆனையிறவு வரையிலான பாதைகளை படையினர் துப்பரவு செய்கின்றனர்.

மன்னார் பகுதியை நோக்கியும் படையினர் சென்று கொண்டிருக்கின்றனர்.

**மக்களின்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசும்போது தமிழீழ மக்கள் முன்னணி அமைப்பாளர் மூர்த்தி தெரிவித்தார்.

மக்களின் அன்பின் அரவணைப்பில் இன்று நாம் இந்த நிலையில் இருக்கிறோம். மக்களைச் சுரண்டி வாழ்ந்த பணம் படைத்த ஒருவரை எம் ஈழப் போராட்டத்திற்கென பண உதவி கேட்டோம், தரவில்லை. ஆனால் அவளவு பணத்தையும் இழந்து தொழிற்சாலை, வர்த்தக நிலையம் போன்றவைகளையெல்லாம் வெறும் குண்டு வீச்சு விமானங்களுக்கு இரையாக்கிய காட்சியை நாம் கண்டுள்ளோம். நாம் எல்லோரும் ஒருமித்த குரலில் முழுமையாகப் பங்கெடுப்போமானால் காட்டிக்கொடுக்கும் சக்தி எப்போதோ அழிந்து போய்விடும். எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் சக்தி இருக்கத்தான் செய்யும். அவர்கள் முறையான தெளிவின்மையால்தான் இந் நிலைக்கு ஆளானார்கள். ஆகவே அவர்களை அன்பின் அரவணைப்பில் எமது கோட்பாட்டுக்குள் கொண்டு வரும் பொறுப்பு அந்தந்த ஊர் சிற்றூர் அவை உறுப்பினர்களைச் சேர்ந்ததேயாகும்.

இவ்வாறு மூர்த்திகூறினார்.

**தமிழரை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் மாத்திரம் 6400 பேர் வந்துள்ளதாகவும் தமிழக அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மண்டபம் முகாமில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளமையினால் 600 அகதிகள் சேலம் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிக்கு அகதிகளாக வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. மொத்தம் 27 ஆயிரம் அகதிக் குடும்பங்கள் இப்பகுதியில் உள்ள ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கான ஒரு வார நிவாரண அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் உணவு வசதிகளைச் சாவகச்சேரி வர்த்தகர் சங்கமும், உடுபுடைவை மற்றும் சகல தேவைகளையும் தென்

## பயிலுநர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களையும் நாளை காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் சங்கக் கூட்டத்திற்கு தவறாது சமூகம் அளிக்கும்படி மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

**இறந்தவரின்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி அரச அதிபரால் மரணச் சடங்குச் செலவாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மரணமடைந்துள்ள ஏனையோருக்குமான அத்தாட்சி வழங்கப்படும் பட்சத்தில் மரணச்சடங்குச்செலவு வெகு விரைவில் கொடுக்கப்படுமென்று கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

**மூன்றுபெண்கள்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காயங்களுடன் இறந்திருப்பதைக் கண்டார். சம்பந்தப்பட்டவர்கள் இறந்திருந்த இடத்திற்கருகில் மண்வெட்டி ஒன்றுஇரத்தம்படிந்த நிலையில் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வீரமலை கமலாதேவி (வயது 37) என்பவரும், இவரது மகள்மாரான வீ. செல்வமணி (வயது 16) வீ. லோகநாயகி (வயது 10) ஆகியோரே கொலை செய்யப்பட்ட பெண்களாவார்கள்.

இக் கொலைகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் விடுதலைப்புலிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இக்கொலைகள் வவுனியாப் பகுதியெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

வசதிகளைத் தென்மராட்சி மருத்துவப் பிரிவும் கவனித்து வருகின்றன. (24)

## மீட்பு நிதி விளக்கம்

தமிழீழ மீட்பு நிதிக்கான ஆரம்பக் கலை நிகழ்ச்சிகளையும், விளக்கங்களையும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட மாணவர் இயக்கம் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வழங்கி வருகிறது.

நேற்று ஓட்டுமடம், ஐந்து சந்தி, ஆனைப்பந்தியடி, நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோயிலடி, தட்டாதெரு, பிறவுண் றோட், புங்கன்குளம் சந்தி, தபால் கட்டை சந்தி, கனகரத்தினம் வீதி, நாச்சிமார் கோயிலடிப் பகுதிகளில் நிகழ்ச்சிகளை வழங்கினர்.

**போர்க்கால**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளிகளுக்கு வேண்டிய உணவு சேகரித்தல், காவல் அரண்களை அமைப்பதற்கு வேண்டிய உபகரணங்களைச்சேகரித்தல் ஆகியவேலைகளில்பொது மக்களே முன்நின்று உற்சாகமாக உழைப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வேலைகளில் பெண்களே கூடிய பங்களிப்பைச் செலுத்துகின்றனர். கொழும்புத்துறையில் ஏராளமான பெண்கள் ஒரு கோயில் முன்றலில் கூடிநின்று மண்மூடை கட்டுவதையும், சிறுவர்கள் சாக்குகள் சேகரித்துக் கொடுப்பதையும், அரியாலையில்பெண்களே முன்நின்று பதுங்கு குழிகள் அமைப்பதையும் நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

**தமிழர் உடைமைகள்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சமடைந்துள்ளன என்பது தெரிந்ததே.

மேற்படி குடும்பங்கள்வெளியேறிய வீடுகளிலேயே இக்கொள்ளையர்கள் திருட்டு வேலைகளில் அதிகமாக ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

வவுனியா தோணிக்கல் என்ற இடத்தில் பொதுமக்களிடம் பிடிபட்ட திருடர்கள் இருவரும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (தி)

**தமிழரை அழிக்க**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 11 ஆம் திகதி முதல் இதுவரை ஆயிரத்து நானூறுக்கும் அதிகமானோர்கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இனப்படுகொலையை அரசுசெய்வதாகவும் விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Liberation Tigers Of TAMIL EELAM

தமிழீழம்
09-07-1990

# இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்க இளைஞர்களே தமிழர் இராணுவத்தில் சேருங்கள்

சிறீலங்கா இராணுவம் என்பது ஏனைய நாடுகளில் இருப்பது போன்று நாட்டின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்ட தேசிய இராணுவம் அல்ல;

அது தனிச்சிங்கள இராணுவம்.

சிங்களவர்களினால் சிங்களவர்களைப் பாதுகாக்க என அமைக்கப்பட்ட சிங்களவர்களையே கொண்ட இராணுவம்.

அந்த இராணுவம் இதுவரை எந்த நாட்டுப் படைகளுடனும் போராடவில்லை. தமிழ்பேசும் மக்கள் மீது தான் பலதடவைகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது

சிறீலங்கா இராணுவம்

தமிழ்பேசும் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது.

தமிழ்பேசும் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களில் ஏராளமானோரை அகதிகளாகவும், அனாதைகளாகவும் ஆக்கியிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களின் நிலங்களைச் சிங்களவர்கள் ஆக்கிரமிக்க பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும் இருந்து வருகிறது.

இந்த நடவடிக்கைகளை அதிகப்படுத்தி மேலும் பரவலாக்கி தமிழ்பேசும் இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத் தான் சிறீலங்கா அரசு புதிதாக இராணுவத்திற்கு ஆட்சேர்க்கிறது; ஆயுதங்களை வாங்குகிறது: மேலதிக செலவினங்களுக்கு பாராளுமன்றத்தில் ஒப்புதலும் பெற்றிருக்கிறது.

இளைஞர்களே!

இந்நிலையில் சிங்கள இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்க, தமிழின அழிவைத் தடுத்துநிறுத்த, தமிழ்பேசும் மக்களின் தேசிய இராணுவமான விடுதலைப்புலிகளின் இராணுவத்தில் உடனடியாக உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

மத்தியகுழு
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

வெளியீடு: செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

**அனாதர**

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நகரில் இருந்து கல்முனைப் பகுதிக்குச் சென்ற அகதி மீனவர்கள் கரை சேர்த்துக் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

9161 இலக்கத்தை உடைய படகு அகதிகளைத் தமிழகத்திற்கு ஏற்றிய பணியில் ஈடுபட்டிருக்கலாமென்ற சந்தேகத்தை கடற்றொழில் சங்கச் செயலாளர் திரு. சி. தவரெட்ணம் வலியுறுத்தினார்.

படகில் இந்திய சில்லறைக் காசுகள் சிலவும், அரிசியும்சிதறிக்கிடந்ததாகவும் அவர் மேலும் சொன்னார். (21)

**மீட்பு நிதி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், அரங்கேற்றப்படும் என யாழ்.விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பாரதி தெரிவித்தார்.

மேற் கூறிய கலை நிகழ்ச்சிகள் இதுவரை சாலமும் வலிகாமம் பகுதியில் அரங்கேற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**மாநாடு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியோகத்தர் மாநாடு நாளை காலை 10 மணியளவில் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் எனக் கூட்டுறவு உதவி ஆணையாளர் மா. கனகசபை அறிவித்துள்ளார்.

**விமானத் தாக்குதல்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளுடனிருப்பதால்அதை எதிர்த்து விடுதலைப் புலிகள் என்னசெய்யக் காத்திருக்கிறார்கள் என்ற நிருபரின் கேள்விக்குக் கரிகாலன் பதிலளிக்கையில் இந்திய இராணுவமும் விமானத் தாக்குதலை நடாத்தியது. வடமராட்சி லிபறேசன் ஒப்பறேசனில் ஸ்ரீலங்கா அரச படைகளும் விமானத் தாக்குதலை நடத்தியது. இதனால் அதைக்கண்டு நாங்கள் அஞ்சவில்லை. மக்களும் அஞ்ச மாட்டார்கள். மக்கள் எம் பக்கம் நிற்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசுடன் யுத்த நிறுத்தம், சமரசம் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தும் வாய்ப்பு இருக்கிறதா! என்று கேட்ட கேள்விக்குக் கரிகாலன் பதிலளிக்கையில் "இதுபற்றி மேலிடம்" தான் தீர்மானிக்க வேண்டும் என்று சொன்னார்.

## உலக கிண்ணத்தை மே. ஜேர்மனி வென்றது

பதின்மூன்றாவது உதைபந்தாட்ட உலக கிண்ணத்தை மேற்கு ஜேர்மனி பெற்றுக் கொண்டது. ஆஜென்டீனாவிற்கும் மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் நடைபெற்ற இப் போட்டியில் 0-1 என்ற ரீதியில் மேற்கு ஜேர்மனி வெற்றி பெற்றது.

போட்டி முடிவதற்கு 8நிமிடங்கள் இருக்கையில் மேற்கு ஜேர்மனியினர் இக்கோல் பனாட்டி உதை மூலம் போடப்பட்டது. மேற்கு ஜேர்மனி உலக கிண்ணத்தைப் பெறுவது இத்தோடு மூன்றாவது தடவையாகும்.

## இன்றைய கூட்டம்

**யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது)**

**கிளைக்குழுக் கூட்டம்**

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கான கூட்டம் 10-07-90 பிற்பகல் 3.00 மணிக்கு 18/1, கைலாசபிள்ளையார் கோயில் வீதியில் இருக்கும் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் கிளைகளின் பாதுகாப்பு, அத்தியாவசிய சேவை, உபஉணவு உற்பத்தி ஆகிய விடயங்கள் சம்பந்தமாக விசேட விருந்தினர் உரையாற்றுவார்கள். அனைத்து கிளைக்குழு உறுப்பினர்களையும் தவறாது சமூகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(B/1237) -பொதுமுகாமையாளர்